123/DD/20

T.C-116

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CIVIL AND CRIMINAL JUDICIAL TEST FOR MEMBERS OF THE JUDICIAL DEPARTMENT — PART - II

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. The code of civil procedure 1908 come into force on

(A) 01.01.1908 (B) 01.04.1908

(C) 01.01.1909 (D) 01.04.1909

உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 நடைமுறைக்கு வந்த நாள்

(A) 01.01.1908 (B) 01.04.1908

(C) 01.01.1909 (D) 01.04.1909

2. The term "Decree" is defined under section ———— of C.P.C.

(A) Sec. 2(1) (B) Sec. 2(2)

(C) Sec. 2(3) (D) Sec. 2(4)

தீர்ப்பாணை என்னும் பதம் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள பிரிவு

(A) பிரிவு 2(1) (B) பிரிவு 2(2)

(C) பிரிவு 2(3) (D) பிரிவு 2(4)

3. The term "Government Pleader" is defined under section ———— of C.P.C.

(A) Sec. 2 (7) (B) Sec. 2 (8)

(C) Sec. 2 (9) (D) Sec. 2 (10)

"அரசு வழக்கறிஞர்" என்னும் பதம் வரையறை செய்யப்பட்டுள்ள உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு

(A) பிரிவு 2(7) (B) பிரிவு 2(8)

(C) பிரிவு 2(9) (D) பிரிவு 2(10)

4. Section 2(12) of C.P.C deals about

(A) Movable property (B) Immovable property

(C) Public officer (D) Mesne profit

பிரிவு 2(12) உரிமையியல் நடைமுறை சட்டம் விளக்குவது

(A) அசையும் சொத்து (B) அசையா சொத்து

(C) பொது அலுவலர் (D) தவறான ஆதாயம்

5. Movable property includes growing crops under C.P.C.

(A) Sec 2(13)
(B) Sec 2(14)
(C) Sec 2(15)
(D) Sec 2(16)

அசையும் சொத்து என்பது விளைவிக்கும் பயிர் வகைகளை உள்ளடக்கியது என குறிப்பிடப்பட்டுள்ள உரிமையியல் நடைமுறை சட்ட பிரிவு

(A) பிரிவு 2(13)
(B) பிரிவு 2(14)
(C) பிரிவு 2(15)
(D) பிரிவு 2(16)

6. The term "Public Officer" defined under section ———— of C.P.C.

(A) Sec. 2(16)
(B) Sec. 2(17)
(C) Sec. 2(18)
(D) Sec. 2(19)

"பொது அலுவலர்" என்னும் பதம் வரையறை செய்யப்பட்டுள்ள உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு

(A) பிரிவு 2(16)
(B) பிரிவு 2(17)
(C) பிரிவு 2(18)
(D) பிரிவு 2(19)

7. "The right to celebrate the annual festival in a temple is a civil right", This was held in

(A) Rangachariar vs. Rangasami Battachar
(B) Raghunath vs. Damodhar
(C) St of Tamil Nadu vs. Govinda Samy
(D) Sri Varatharaja Perumal Kovil trustee vs. Rengarajan

"கோவில் ஆண்டு திருவிழா கொண்டாடும் உரிமை என்பது ஒரு உரிமையியல் உரிமை", இது கூறப்பட்ட வழக்கு

(A) ரங்காச்சாரியர் எதிர் ரங்கசாமி பட்டாச்சியர்
(B) ரகுராத் எதிர் தாமோதர்
(C) தமிழ்நாடு மாநிலம் எதிர் கோவிந்த சாமி
(D) ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில், டிரஸ்டி எதிர் ரெங்கராஜன்

8. Stay of suit under the C.P.C. dealt under sec

(A) Section 10
(B) Section 11
(C) Section 12
(D) Section 13

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் ———— பிரிவு "வழக்கை நிறுத்தி வைத்தல்" பற்றி குறிப்பிடுகின்றது.

(A) பிரிவு 10
(B) பிரிவு 11
(C) பிரிவு 12
(D) பிரிவு 13

9. The temporary injunction and interlocutory orders under C.P.C. can be granted under

(A) Order XXIX Rule 1 (B) Order XXXIX Rule 1

(C) Order XIX Rule 1 (D) None of the above

தற்காலிக உறுத்துக்கட்டளை மற்றும் இடைக்கால உத்தரவானது உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு ___________ ன் கீழ் பிறப்பிக்கப்படுகின்றது.

(A) கட்டளை XXIX விதி 1 (B) கட்டளை XXXIX விதி 1

(C) கட்டளை XIX விதி 1 (D) மேற்கண்ட எவையுமில்லை

10. Arrest before judgment under C.P.C. can be done under

(A) Order XVIII Rule 1 (B) Order XXVIII Rule 1

(C) Order XXXVIII Rule 1 (D) Order VIII Rule 1

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் தீர்ப்பிற்க்கு முன்பு கைது செய்ய வகை செய்யும் பிரிவு

(A) கட்டளை XVIII விதி 1 (B) கட்டளை XXVIII விதி 1

(C) கட்டளை XXXVIII விதி 1 (D) கட்டளை VIII விதி 1

11. The concept of resjudicata under civil procedure code is dealt under section

(A) Section 10 (B) Section 11

(C) Section 12 (D) Section 13

முன்தீர்ப்பு தடை என்னும் கோட்பாடு பற்றி கூறும் உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு

(A) பிரிவு 10 (B) பிரிவு 11

(C) பிரிவு 12 (D) பிரிவு 13

12. "Every suit shall be instituted in the court of lowest grade competent to try it", This was dealt under section

(A) Section 13 (B) Section 14

(C) Section 15 (D) Section 16

ஒவ்வொரு உரிமையியல் வழக்குகளும் அதனை விசாரிக்க தக்க கீழமை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடும் பிரிவு

(A) பிரிவு 13 (B) பிரிவு 14

(C) பிரிவு 15 (D) பிரிவு 16

13. Section 26 of C.P.C. deals about

(A) Transfer of suit

(B) Service of summon

(C) Summons to defendants

(D) Institution of suit

பிரிவு 26 உரிமையியல் நடைமுறை சட்டம் குறிப்பிடுவது

(A) வழக்கை மாற்றம் செய்தல்

(B) அழைப்பாணை சார்பு செய்தல்

(C) பிரதி வாதி அழைப்பாணை அனுப்புதல்

(D) வழக்கை தொடங்குதல்

14. Service of foreign summons discussed under section ———— of C.P.C.

(A) Sec. 26

(B) Sec. 27

(C) Sec. 28

(D) Sec. 29

வெளிநாட்டு அழைப்பாணை சார்பு செய்தல் பற்றி விவாதிக்கும் உரிமையியல் நடைமுறை சட்டபிரிவு

(A) பிரிவு 26

(B) பிரிவு 27

(C) பிரிவு 28

(D) பிரிவு 29

15. Section 32 of C.P.C. defines about

(A) Penalty for default

(B) Appearance of parties

(C) Summons to witness

(D) Summons to parties

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 32 விளக்குவது

(A) தவறுகைக்கான தண்டனை

(B) தரப்பினர்களின் தோன்றுகை

(C) சாட்சிகளுக்கான அழைப்பாணை

(D) தரப்பினர்களுக்கான அழைப்பாணை

16. On application of a decree holder a decree may transfer from one court to another court under section ———— of C.P.C. for execution.

(A) Section 36

(B) Section 37

(C) Section 38

(D) Section 39

தீர்ப்பு வைத்திருப்பவரின் விண்ணப்பத்திற்கு கோரியதற்க்கேற்ப்ப நீதிமன்ற தீர்பை நிறைவேற்றத்திற்கு ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்க்கு மாற்றம் செய்ய வகை செய்யும் உ.ந.ச. பிரிவு

(A) பிரிவு 36

(B) பிரிவு 37

(C) பிரிவு 38

(D) பிரிவு 39

17. Under the decree of maintenance in the execution, How much amount can attach from the salary under C.P.C.?

(A) One third of salary
(B) Half of salary
(C) Twenty Five percent of salary
(D) None of the above

ஜீவனாம்ச தீர்ப்பு நிறைவேற்றலில் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் சம்பளத்திலிருந்து ஜப்தி செய்ய கூடிய தொகையின் அளவு

(A) சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு
(B) சம்பளத்தில் பாதி பங்கு
(C) சம்பளத்தில் கால் பங்கு
(D) இவற்றில் எதுவுமில்லை

18. In order to executing any process for seizure of any movable property is prohibited after sunset and before sunrise is dealt under sec ———— of C.P.C.

(A) Section 61(1)
(B) Section 61(2)
(C) Section 62(1)
(D) Section 62(2)

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் அசையும் சொத்தை பறிமுதல் செய்யும் நடைமுறை நிறைவேற்றமானது சூரியன் மறைவிற்கு பிறகும் சூரிய உதயத்திற்கு முன்பு தடை செய்யப்பட்டுள்ள பிரிவு

(A) பிரிவு 61(1)
(B) பிரிவு 61(2)
(C) பிரிவு 62(1)
(D) பிரிவு 62(2)

19. Section 65 of C.P.C. deals about

(A) Purchaser's Title
(B) Property Attachment
(C) Seizure of Property
(D) All the above

உரிமையியல் நடைமுறை சட்ட பிரிவு 65 குறிப்பிடுவது

(A) கிரையம் வாங்குபவரின் உரிமை மூலம்
(B) சொத்தினை ஜப்தி செய்வது
(C) சொத்தை பறிமுதல் செய்தல்
(D) மேற்கண்ட அனைத்தும்

20. Trial in open court as per section

(A) Section 153 B
(B) Section 153 A
(C) Section 151
(D) Section 150

திறந்த நீதிமன்ற விசாரணை பற்றி கூறும் பிரிவு

(A) பிரிவு 153 B
(B) பிரிவு 153 A
(C) பிரிவு 151
(D) பிரிவு 150

21. The provision relating to a suit by or against Government under civil procedure code is defined under sec

(A) Section 78
(B) Section 79
(C) Section 80
(D) Section 81

உரிமையியல் நடைமுறை சட்டத்தன் கீழ் அரசினால் அல்லது அரசுக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்ய வகை செய்யும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 78
(B) பிரிவு 79
(C) பிரிவு 80
(D) பிரிவு 81

22. In case of a suit against Central Governments to whom the notice is to be issue under section 80. C.P.C.

(A) The Secretary to Govt.
(B) The Joint Secretary
(C) The Deputy Secretary
(D) None of the above

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80 ன் கீழ் மத்திய அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் நேர்வில் அறிவிப்பு அனுப்பப்பட வேண்டிய நபர்

(A) அரசு செயலர்
(B) இணை செயலர்
(C) துணை செயலர்
(D) இவற்றில் எதுவுமில்லை

23. Section 82 C.P.C. defines about

(A) Exemption from arrest
(B) Suits by Alien
(C) Execution of decree
(D) All the above

உரிமையியல் நடைமுறை சட்டபிரிவு 82 வரையறை செய்வது.

(A) கைது செய்வதிலிருந்து விலக்கு
(B) வெளியாட்களால் வழக்கிடுதல்
(C) தீர்ப்பாணை நிறைவேற்றுதல்
(D) மேற்கண்ட அனைத்தும்

24. Attendance of witnesses in prison as per

(A) O. 14 R. 2
(B) O. 16A
(C) O. 16
(D) O. 17

சிறையிலுள்ள சாட்சிகளின் வருகை பற்றி கூறுவது

(A) க. 14 வி. 2
(B) க. 16A
(C) க. 16
(D) க. 17

25. Section 91 of C.P.C. deals about

(A) Public Nuisance
(B) Public Charities
(C) Power of Advocate General
(D) All the above

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 91 குறிப்பிடுவது

(A) பொது தொல்லை / இடையூறு
(B) பொது தொண்டு
(C) தலைமை வழக்கறிஞர் அதிகாரம்
(D) மேற்கண்ட அனைத்தும்

26. Section 92 of C.P.C. deals about

(A) Public Nuisance
(B) Public charities
(C) Power of Govt. Pleader
(D) All the above

பிரிவு 92 உரிமையியல் நடைமுறை சட்டம் குறிப்பிடுவது

(A) பொது தொல்லை / இடையூறு
(B) பொது தொண்டு
(C) அரசு வழக்கறிஞரின் அதிகாரம்
(D) மேற்கண்ட அனைத்தும்

27. Compensation for arrest or attachment on insufficient ground is dealt under section ———— of C.P.C.

(A) Sec. 95
(B) Sec. 96
(C) Sec. 97
(D) Sec. 98

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் போதிய காரணமின்றி கைது செய்தாலோ ஜப்தி செய்தாலோ இழப்பீடு வழங்க வகை செய்யும் பிரிவு

(A) பிரிவு 95
(B) பிரிவு 96
(C) பிரிவு 97
(D) பிரிவு 98

28. The provision for appeal from original decree is dealt under section ———— of C.P.C.

(A) Sec. 95
(B) Sec. 96
(C) Sec. 97
(D) Sec. 98

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் அசல் தீர்ப்பாணை மீது மேல்முறையீடு செய்ய வகை செய்யும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 95
(B) பிரிவு 96
(C) பிரிவு 97
(D) பிரிவு 98

29. Section 100 of civil procedure code deals about

(A) Special leave petition
(B) First appeal
(C) Second Appeal
(D) None of the above

பிரிவு 100 உரிமையியல் நடைமுறை சட்டம் விளக்குவது

(A) சிறப்பு முறையீட்டு மனு
(B) முதல் மேல்முறையீடு
(C) இரண்டாம் மேல்முறையீடு
(D) மேற்கண்டவை எதுவுமில்லை

30. No second appeal is allowed if the value of suit does not exceed under C.P.C.

(A) Rs. 15,000
(B) Rs. 20,000
(C) Rs. 25,000
(D) Rs. 30,000

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் எவ்வளவு தொகைக்கு கீழ் உள்ள வழக்கிற்க்கு இரண்டாம் மேல்முறையீடு கிடையாது?

(A) ரூ. 15,000
(B) ரூ. 20,000
(C) ரூ. 25,000
(D) ரூ. 30,000

31. The appellate court under section 107 of C.P.C. shall have the power to

(A) Determine a case fully
(B) Remand the case
(C) Refer them for trial
(D) All the above

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 107 ன் கீழ் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களாவன

(A) வழக்கை முற்றிலும் கண்டறிய
(B) வழக்கை மீண்டும் விசாரணைக்கு திருப்புதல்
(C) விசாரணைக்கு பரிந்துரைத்தல்
(D) மேற்கண்ட அனைத்தும்

32. Section 114 of C.P.C. deals about

(A) Review
(B) Revision
(C) Appeal
(D) Second Appeal

பிரிவு 114 உரிமையியல் நடைமுறை சட்டம் குறிப்பிடுவது

(A) மறு ஆய்வு
(B) சீராய்வு
(C) மேல் முறையீடு
(D) இரண்டாம் மேல்முறையீடு

33. The provision relating to revision under C.P.C. is defined under section

(A) Section 114 (B) Section 115

(C) Section 116 (D) Section 117

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் எந்த பிரிவு சீராய்வு பற்றி விளக்குகின்றது?

(A) பிரிவு 114 (B) பிரிவு 115

(C) பிரிவு 116 (D) பிரிவு 117

34. The following person/s are entitled to exemption from personal appearance in court under sec 133 of C.P.C.

(A) The Vice President only (B) The Union Ministers only

(C) Judge of Supreme court only (D) All the above

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 133 ன் கீழ் நீதிமன்றத்தில் நேரடி ஆஜராவதில் இருந்து விதிவிலக்கு பெற்ற நபர்/கள்

(A) துணை ஜனாதிபதி மட்டும் (B) மத்திய அமைச்சர்கள் மட்டும்

(C) உச்சநீதிமன்ற நீதிபதி மட்டும் (D) மேற்கண்ட அனைவரும்

35. Order 1 rule 2 of C.P.C. deals about

(A) Plaintiffs

(B) Defendant

(C) Plaint

(D) Power of court to order separate trial

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 2 குறிப்பிடுவது

(A) வாதிகள் பற்றி

(B) பிரிதிவாதிகள் பற்றி

(C) பிராது பற்றி

(D) வழக்கு விசாரணையை பிரிக்க உத்தரவிடும் நீதிமன்ற அதிகாரம்

36. Order 2 Rule 1 of C.P.C. deals about.

(A) Plaintiff (B) Defendant

(C) Frame of suit (D) Written statement

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 1 குறிப்பிடுவது

(A) வாதி பற்றி (B) பிரிதிவாதிகள் பற்றி

(C) வழக்கின் கட்டமைப்பு பற்றி (D) எதிர் வழக்குரை பற்றி

37. Recognised agents in a suit be appointed under ———— of C.P.C.

(A) Order III Rule 1
(B) Order III Rule 2
(C) Order III Rule 3
(D) Order III Rule 4

உரிமையியல் நடைமுறை சட்டம் ———— ன் கீழ் வழக்கு ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வழக்குறைஞர் நியமிப்பது பற்றி குறிப்பிடுகின்றது.

(A) கட்டளை III விதி 1
(B) கட்டளை III விதி 2
(C) கட்டளை III விதி 3
(D) கட்டளை III விதி 4

38. Order VII Rule 2 of C.P.C. deals about a plaint for

(A) Money Suit
(B) Partition Suit
(C) Suit for Injunction
(D) Suit for recovery of possession

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை VII விதி 2 ———— க்கான பிராது தாக்கல் செய்வது பற்றி குறிப்பிடுகின்றது.

(A) பண வழக்கு பிராது
(B) பாகப் பிரிவினை வழக்கு பிராது
(C) உறுத்துக் கட்டணை பிராது
(D) உடைமை மீட்டு வழக்கு பிராது

39. Order VIII Rule 1 of C.P.C. deals about

(A) Written Statement
(B) New facts in a plaint
(C) Evasive denial
(D) Specific Denial

கட்டளை VIII விதி 1 உரிமையியல் நடைமுறை சட்டம் குறிப்பிடுவது

(A) எதிர் வாதுரை
(B) பிராதில் புதிய பொருண்மை
(C) வெற்று மறுப்பு
(D) குறித்த வகை மறுப்பு

40. Execution of decree and orders are delt under ———— of C.P.C.

(A) Order XXI Rule 1 (B) Order XX Rule 1

(C) Order XXI Rule 5 (D) None of the above

உரிமையியல் நடைமுறை சட்டம் ____________ ன் கீழ் தீர்ப்புரை மற்றும் உத்தரவு நிறைவேற்றம் செய்ய வகை செய்கின்றது.

(A) கட்டளை XXI விதி 1 (B) கட்டளை XX விதி 1

(C) கட்டளை XXI விதி 5 (D) மேற்கண்ட எவையும் இல்லை

41. Which of the following provision deals with "Legal Representative" under civil procedure code 1908?

(A) Section 40 (B) Section 50

(C) Section 60 (D) Section 70

உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ல் பின்வரும் எப்பிரிவு "சட்ட பிரதிநிதி" குறித்து கையாளப்படுகிறது?

(A) பிரிவு 40 (B) பிரிவு 50

(C) பிரிவு 60 (D) பிரிவு 70

42. The code of civil procedure amendment acts 1999 and 2002 were enacted on the recommendations of

(A) Santhanam Committee (B) Malimath Committee

(C) Thakker Committee (D) None of the above

கீழ்க்கண்ட எந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1999 மற்றும் 2002 ஆண்டுகான திருத்தம் உரிமையியல் நடைமுறை சட்டத்தில் கொண்டு வரப்பட்டது

(A) சந்தானம் குழு (B) மலிமத் குழு

(C) தக்கர் குழு (D) மேற்க்கண்ட ஏதுமில்லை

43. 'Code' under civil procedure code, 1908 has been defined in the

(A) Section 2(1)
(B) Section 2(2)
(C) Section 2(a)
(D) Section 2(b)

உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 ன்படி "சட்டம்" குறித்து விளக்கும் பிரிவு

(A) பிரிவு 2(1)
(B) பிரிவு 2(2)
(C) பிரிவு 2(a)
(D) பிரிவு 2(b)

44. In which of the following cases the supreme court laid down the principles regarding the jurisdiction of civil courts in relation to industrial disputes?

(A) Dhulabhai V. State of MP
(B) Premier Automobiles Ltd V. Kamlakar Shantaram Wadke
(C) Nirmal V. Jahan Ara
(D) None of the above

கீழ்காணும் எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தொழில் தகராறுகள் சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் அதிகார வரம்பு குறித்து கொள்கைகளை வகுத்தது

(A) துளாபாய் எதிர் மத்திய பிரதேச மாநிலம்
(B) பிரிமியர் ஆட்டோமொபைல்ஸ் லிட் எதிர் கம்ளாகர் சாந்தாராம் வட்கே
(C) நிர்மல் எதிர் ஜான் ஆரா
(D) ஏதுமில்லை

45. The code of civil procedure (Amendment) Act, 2002 came into force on

(A) 01.07.2002
(B) 01.04.2002
(C) 01.01.2002
(D) 01.06.2002

2002 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை திருத்த சட்டம் நடைமுறைக்கு வந்தது

(A) 01.07.2002
(B) 01.04.2002
(C) 01.01.2002
(D) 01.06.2002

46. Which of the following section's of civil procedure code defines an order?

(A) Section 2(2)
(B) Section 2(9)
(C) Section 2(14)
(D) Section 2(15)

கீழ்க்கண்ட உரிமையியல் நடைமுறை சட்டத்தின் எந்த பிரிவானது ஆணை பற்றி வரையறுக்கிறது?

(A) பிரிவு 2(2)
(B) பிரிவு 2(9)
(C) பிரிவு 2(14)
(D) பிரிவு 2(15)

47. The principles of res judicata does not apply in case of writ of

(A) Habeas Corpus
(B) Mandamus
(C) Quo Warranto
(D) Prohibition

முன் தீர்ப்பு தடை கொள்கை கீழ்கண்ட எந்த பேராணைக்கு பொருந்தாது?

(A) ஆட் கொணர்விக்கும் நீதிப் பேராணை
(B) செயலுறுத்தும் நீதிப் பேராணை
(C) தகுதி முறை வினவும் நீதிப் பேராணை
(D) தடையுறுத்தும் நீதிப் பேராணை

48. Which of the following cases are related to resjudicata?

(A) Lal Chand V. Radha Kishan AIR 1977, SC 789
(B) Sheoparsan Singh V. Ramnandan Singh AIR 1916, PC 78
(C) Sulochana Amma V. Narayanan Nair AIR 2005, SC 2392
(D) All of the above

கீழ்கண்ட எந்த வழக்கு முன் தீர்ப்பு தடையோடு சம்மந்தப்பட்டவை?

(A) லால் சந் எதிர் ராதாகிஷன் AIR 1977, SC 789
(B) சியோ பர்சன் சிங் எதிர் ராம் நந்தன் சிங் AIR 1916, PC 78
(C) சுலோச்சனா அம்மா எதிர் நாராயணன் நாயர் AIR 2005, SC 2392
(D) மேற்க்கண்ட அனைத்தும்

49. Which of the following explanation to section 11 of the code of civil procedure 1908, deal with 'matter actually in issue'?

(A) Explanation II

(B) Explanation III

(C) Explanation IV

(D) Explanation V

உரிமையியல் நடைமுறை சட்டம் 1908 ல் பிரிவு 11 கான எந்த விளக்கம் கொள்நிலை வழக்கு எழுவினா குறித்து விளக்குகிறது

(A) விளக்கம் II

(B) விளக்கம் III

(C) விளக்கம் IV

(D) விளக்கம் V

50. Which of the following is a leading judgment on foreign judgment obtained by fraud?

(A) Satyadhyan Ghosal V. Deorjin Debi

(B) Satya V. Teja Singh

(C) LIC V. Indian Automobiles

(D) None of the above

கீழ்கண்ட எந்த முக்கிய வழக்கில் மோசடி மூலம் பெறப்பட்ட அயல் நாட்டு தீர்ப்பு குறித்தது?

(A) சத்திய தியான் சோசல் எதிர் டியோர்ஜின் டேபி

(B) சத்தியா எதிர் தேஜாசிங்

(C) எல்.ஐ.சி. எதிர் இந்தியன் ஆட்டோமொபைல்

(D) மேற்க்கண்ட ஏதுமில்லை

51. Which of the following is a leading case on the exclusion of the jurisdiction of civil courts?

(A) Dhulabhai V. State of M.P

(B) Gundaji V. Ramchandra

(C) Noor Mohd. Khan V. Fakirappa

(D) All of the above

கீழ்கண்ட எந்த முக்கிய வழக்கு உரிமையியல் நீதிமன்றத்துக்கான அதிகார வரம்பின் விலக்கு அளிப்பது குறித்தது

(A) துளாபாய் எதிர் மத்திய பிரதேச மாநிலம்

(B) குண்டாஜி எதிர் ராமசந்திரா

(C) நூர் முகமது கான் எதிர் பகிரப்பா

(D) மேற்க்கண்ட அனைத்தும்

52. Under which provision of civil procedure code, a High Court can transfer any case?

(A) Section 20

(B) Section 12

(C) Section 24

(D) Section 15

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ்காணும் எந்த விதியானது எந்த ஒரு வழக்கையும் மாற்றம் செய்யும் உயர் நீதிமன்றத்தின் அதிகாரம் குறித்து விளக்குகிறது

(A) பிரிவு 20

(B) பிரிவு 12

(C) பிரிவு 24

(D) பிரிவு 15

53. Section 20 of C.P.C. does not apply to

(A) Arbitration Proceeding's

(B) Civil Proceeding's

(C) Both (A) and (B)

(D) Neither (A) nor (B)

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 20 பொருந்தாது

(A) இசைவு தீர்வு நடவடிக்கை

(B) உரிமையியல் நடவடிக்கை

(C) (A) மற்றும் (B)

(D) (A) யும் (B) யும் இல்லை

54. Who can be arrested in execution of a decree?

(A) A man
(B) A Woman
(C) A Minor
(D) All of these

தீர்ப்பாணை நிறைவேற்றுதலில் கீழ்காணும் எந்த நபரை கைது செய்ய முடியும்?

(A) ஒரு மனிதன்
(B) ஒரு பெண்
(C) ஒரு இளவர்
(D) இவர்கள் அனைவரையும்

55. Order XXA of civil procedure code deals with

(A) Cost
(B) Judgement and Decree
(C) Affidavits
(D) Adjournment

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XXA பின்வரும் எதனை கையாள்கிறது?

(A) செலவு
(B) தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை
(C) பிரமான வாக்குமூலம்
(D) வழக்கினை தள்ளிவைத்தல்

56. Which section under the civil procedure code, 1908 deals with the settlement of disputes outside the court?

(A) Section 88
(B) Section 89
(C) Section 98
(D) Section 99

உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ்காணும் எந்த பிரிவு நீதிமன்றத்திற்கு வெளியே வழக்குகளை சமரசம் செய்வது குறித்து கூறுகிறது?

(A) பிரிவு 88
(B) பிரிவு 89
(C) பிரிவு 98
(D) பிரிவு 99

57. Provisions relating to inter-pleader suit are contained in

(A) Order XXXIV of C.P.C.

(B) Section 88 of C.P.C.

(C) Order XXXV of C.P.C.

(D) Both (B) and (C)

இடைப்பாத்திய வழக்கு குறித்து கூறும் விதிகள்

(A) கட்டளை XXXIV (உரிமையியல் நடைமுறைச் சட்டம்)

(B) பிரிவு 88 உரிமையியல் நடைமுறை சட்டம்

(C) கட்டளை XXXV உரிமையியல் நடைமுறைச் சட்டம்

(D) (B) மற்றும் (C)

58. Section 89 of the C.P.C. was inserted in

(A) 1993 (B) 1998

(C) 1999 (D) 2009

உரிமையியல் நடைமுறை சட்டத்தில் பிரிவு 89 இணைக்கப்பட்ட ஆண்டு

(A) 1993 (B) 1998

(C) 1999 (D) 2009

59. A suit in respect of public charities is provided under?

(A) Section 92 of CPC (B) Section 41 of CPC

(C) Section 100 of CPC (D) Section 105 of CPC

பொது அறக்கொடைகள் குறித்த வழக்கு கீழ்காணும் எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 92

(B) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 41

(C) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 100

(D) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 105

60. Order 33 deals with
(A) Suits by indigent persons
(B) Inter pleader suit
(C) Suits relating to mortgages
(D) Suits by or against firms

கட்டளை 33 தொடர்புடையது
(A) வறியவர்கள் தாக்கல் செய்யும் வழக்கு
(B) இடைத் தரகு வழக்கு
(C) அடைமானம் தொடர்பான வழக்கு
(D) நிறுவனத்திற்கான வழக்கு (அ) எதிரான வழக்கு

61. Clerical or arithmetical mistakes in Judgments, orders etc can be corrected under
(A) Section 152 of CPC
(B) Section 154 of CPC
(C) Section 155 of CPC
(D) Section 153 of CPC

தீர்ப்பு மற்றும் ஆணையில் உள்ள எழுத்து மற்றும் கணித பிழைகளை சரி செய்வது குறித்து கூறும் பிரிவு
(A) உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 152
(B) உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 154
(C) உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 155
(D) உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 153

62. Exemption from personal appearance in the court is provided under
(A) Section 133 of CPC
(B) Section 132 of CPC
(C) Section 143 of CPC
(D) Section 142 of CPC

நீதிமன்றத்தில் தனிநபர் வருகை விலக்கு அளிப்பு குறித்து கூறும் பிரிவு
(A) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 133
(B) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 132
(C) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 143
(D) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 142

63. In which of the following cases it was held that " inherent power has not been conferred on a court, it is a power inherent in the court ......."?

(A) Manoharlal V Seth Hiralal

(B) Cotton corporation India V. United Industrial Bank

(C) Satyabrat Biswas V. Kalyan Kumar Kishku

(D) Rajani Bai V. Kamla Devi

கீழ்காணும் எந்த வழக்கில் நீதிமன்றம் இவ்வாறு உரைத்தது.

நீதிமன்றத்தில் உள்ளார்ந்த அதிகாரம் என்பது வழங்கப்பட்டது அன்று, மாறாக நீதிமன்றத்துக்கு உரித்தானது

(A) மனோகர் லால் எதிர் சேத் கிராலால்

(B) இந்திய பருத்தி கழகம் எதிர் யூனெடெட் தொழில் வங்கி

(C) சத்ய பிராத் பீஸ்வாஸ் எதிர் கல்யாண்குமார் கிஸ்கு

(D) ராஜனிபாய் எதிர் கமலாதேவி

64. Pleading means

(A) Plaint only

(B) Written statement only

(C) Plaint and written statement

(D) Plaint, Written Statement and replication

வாதுரை என்பது

(A) வழக்குரை மட்டும்

(B) எதிர் வழக்குரை மட்டும்

(C) (A) மற்றும் (B)

(D) வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் பிரதி செய்கை

65. Set-off can be claimed

(A) in any suit

(B) in a recovery of money suit

(C) in a suit for possession

(D) in both (A) and (B)

எதிரிடை வாதம் கோர முடியும்

(A) எந்த வழக்கிலும்

(B) பணத்தை திரும்ப பெற கோரும் வழக்கு

(C) உடமை உரிமை கோரும் வழக்கு

(D) (A) மற்றும் (B)

66. In a written statement, a defendant can claim?

(A) Set off

(B) Counter claim

(C) Both (A) and (B)

(D) None of the above

பிரதிவாதி எதிர் வழக்குரையில் கோர முடியும்

(A) எதிரிடை வாதம்

(B) எதிர் பாத்தியம்

(C) (A) மற்றும் (B)

(D) ஏதுமில்லை

67. Order 7, Rule 10 to 10 B provides for

(A) Return of Plaint

(B) Admission of Plaint

(C) Rejection of Plaint

(D) None of the above

கட்டளை 7, விதி 10 முதல் 10B வரை

(A) வழக்குரையை திருப்பி அனுப்புதல்

(B) வழக்குரையை ஏற்றுக் கொள்ளுதல்

(C) வழக்குரையை நிராகரித்தல்

(D) ஏதுமில்லை

68. Is it necessary to pay court - fee for claiming set-off?

(A) Yes
(B) No
(C) Depends
(D) None of the above

எதிரிடை வாதம் கோரும் பொழுது நீதிமன்ற கட்டணம் செலுத்துவது அவசியமா?

(A) ஆம்
(B) இல்லை
(C) சார்ந்தது
(D) ஏதுமில்லை

69. Which of the following is a leading case on counter claim?

(A) Kailash V. Nanhku
(B) Laxmidas Dayabhai V. Nanabhai Chunilal
(C) Rajendira Tiwary V. Basudeo Prasad
(D) None of the above

கீழ்காணும் எந்த முக்கிய வழக்கானது எதிர் பாத்தியம் கோருதலுடன் தொடர்புடையது?

(A) கைலாஷ் எதிர் நங்கு
(B) லட்சுமிதாஸ் தயாபாய் எதிர் நனாபாய் சுனிலால்
(C) ராஜேந்திர திவாரி எதிர் பாசுடோ பிரசாத்
(D) ஏதுமில்லை

70. "Framing of issues" is provided by which rule of C.P.C.?

(A) Order XV Rule 1
(B) Order XIV Rule 1
(C) Order XVI Rule 1
(D) Order XIII Rule 1

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் எந்த விதியானது வழக்கெழு வினா வனையப்படுதல் குறித்து உரைக்கிறது?

(A) கட்டளை XV விதி 1
(B) கட்டளை XIV விதி 1
(C) கட்டளை XVI விதி 1
(D) கட்டளை XIII விதி 1

71. According to which section, This code is applicable to revenue court

(A) Section 3 of C.P.C.

(B) Section 4 of C.P.C.

(C) Section 5 of C.P.C.

(D) Section 6 of C.P.C.

கீழ்கண்ட எந்த பிரிவானது வருவாய் நீதிமன்றத்திற்கு தொடர்புடையது?

(A) உ.ந.மு.ச. பிரிவு 3

(B) உ.ந.மு.ச. பிரிவு 4

(C) உ.ந.மு.ச. பிரிவு 5

(D) உ.ந.மு.ச. பிரிவு 6

72. In which of the following case. The supreme court laid down the following principles regarding the power of the court to add the parties under rule-10(2) of the C.P.C.?

(A) Raiza Begam (v) Sahebzadi Anwar

(B) Anil Kumar (v) Shivnath

(C) T.N. Housing Board (v) T.N. Ganapathy

(D) Ganesh Trading (vs) Moji Ram

உ.ந.மு.ச. பிரிவு 10(2) ன் கீழ் கட்சிக்காரர்களை சேர்ப்பதற்குண்டான நீதிமன்ற அதிகாரத்தினை பற்றி உச்ச நீதிமன்றம் கீழ்கண்ட எந்த வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளது?

(A) ராஷியா பேகம் (எதிர்) ஷகேப்சதி அன்வர்

(B) அனில் குமார் (எதிர்) சிவ்நாத்

(C) டி.என். குடியிருப்பு வாரியம் (எதிர்) டி.என். கணபதி

(D) கணேஷ் டிரேடிங் (எதிர்) மோஜி ராம்

73. After signing of Judgment of final order, the same can be altered or reviewed only for the purpose of

(A) Amending the findings

(B) For enhancing or remitting the amount of costs

(C) For correcting the clerical or arithmetical error

(D) None of the above

தீர்ப்பில் அல்லது இறுதி உத்திரவில் கையொப்பம் செய்த பிறகு அதனை எந்த காரணங்களுக்காக மட்டும் மாற்றவோ அல்லது மறு ஆய்வு செய்யவோ இயலும்?

(A) கண்டறிந்து திருத்தம் செய்யப்படும் போது

(B) செலவுகளை உயர்த்துதல் அல்லது செலுத்தும் போது

(C) எழுத்தர் அல்லது எண் கணித பிழை திருத்தம் செய்யும் போது

(D) இவைகளில் ஏதுமில்லை

74. Where the local limits of Jurisdiction of courts are uncertain, the place of institution of suits shall be decided according to which provisions of the following?

(A) Section 17 of C.P.C.

(B) Section 18 of C.P.C.

(C) Section 19 of C.P.C.

(D) Section 20 of C.P.C.

நீதிமன்றத்திற்கு உள்ளூர் அதிகார வரம்பு நிச்சயமில்லாத சூழ்நிலையில் வழக்கினை தாக்கல் செய்யப்படும் இடத்தினை தீர்மானிப்பது குறித்து கீழ்கண்ட எந்த பிரிவில் சொல்லப்பட்டுள்ளது?

(A) உ.ந.மு.ச. பிரிவு – 17

(B) உ.ந.மு.ச. பிரிவு – 18

(C) உ.ந.மு.ச. பிரிவு – 19

(D) உ.ந.மு.ச. பிரிவு – 20

75. Where the defendant resides out of India, the summons shall be addressed and send to him under order V, Rule 25 of C.P.C.?

(A) Through the high court in the place where the defendant resides

(B) Through any court having jurisdiction in the place where the defendant resides

(C) Through post

(D) Either (A) or (B) or (C)

பிரதிவாதி இந்தியாவை விட்டு வெளியில் குடியிருக்கும் சமயம் உ.ந.மு.ச. ஆர்டர் V விதி 25 ன் கீழ் அவருக்கு எப்படி நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்ய முடியும்?

(A) பிரதிவாதி இருக்கும் இடத்திற்கு கட்டுப்பட்ட உயர் நீதிமன்றம் மூலம்

(B) பிரதிவாதி குடியிருக்கும் இடத்திற்கு கட்டுப்பட்ட எந்த நீதிமன்றம் மூலம்

(C) அஞ்சல் மூலம்

(D) (A) அல்லது (B) அல்லது (C) மூலம்

76. The period of limitation for an application for review of a judgment by a court other than the supreme court is

(A) 60 days

(B) 90 days

(C) 30 days

(D) 120 days

உச்ச நீதிமன்றத்தை தவிர்த்து பிற நீதிமன்றங்களில் தீப்பிணை மறு ஆய்வு செய்ய எவ்வளவு காலத்திற்குள் மறு தாக்கல் செய்ய முடியும்?

(A) 60 நாட்கள்

(B) 90 நாட்கள்

(C) 30 நாட்கள்

(D) 120 நாட்கள்

77. Under what section of C.P.C. 1908, The revisional jurisdiction can be exercised by the High Court?

(A) Section 112 of C.P.C.

(B) Section 113 of C.P.C.

(C) Section 114 of C.P.C.

(D) Section 115 of C.P.C.

கீழ்கண்ட உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ன் எந்த பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்தால் சீராய்வு அதிகாரத்தினை பயன்படுத்த முடியும்?

(A) உ.ந.மு.ச. பிரிவு – 112

(B) உ.ந.மு.ச. பிரிவு – 113

(C) உ.ந.மு.ச. பிரிவு – 114

(D) உ.ந.மு.ச. பிரிவு – 115

78. The period of limitation for the execution of a decree is ———— from the date of decree.

(A) 10 years (B) 5 years

(C) 12 years (D) 2 years

தீர்ப்பு சொல்லப்பட்ட தேதியிலிருந்து அத்தீர்ப்பு நிறைவேற்றுவதற்க்கான கால வரையறை எவ்வளவு?

(A) 10 ஆண்டுகள் (B) 5 ஆண்டுகள்

(C) 12 ஆண்டுகள் (D) 2 ஆண்டுகள்

79. Which of the following case law decides as "A decree, passed by a court without jurisdiction is an nullity"?

(A) Kiran Singh (v) Chaman Naswan

(B) M.L. Sethi (v) R.P Kapur

(C) Abdulla Bin Ali (v) Galappa

(D) Bank of Baroda (v) Moti Bhai

ஒரு நீதிமன்றம் அதிகார வரம்பு இல்லாமல் தீர்ப்பு வழங்கப்பட்டது செல்லுபடியாகாது என்று கீழ்கண்ட எந்த வழக்கில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது?

(A) கிரண்சிங் (எதிர்) சாமன்நிஸ்வான்

(B) எம்.எல். சேதி (எதிர்) ஆர்.பி.கபூர்

(C) அப்துல்லா பின் அலி (எதிர்) காலப்பா

(D) பேங்க் ஆப் பரோடா (எதிர்) மோதி பாய்

80. An order for arrest of a defendant before judgment cannot be obtained in any suit in the following, specified in clause (a) to (d) of section 16 of C.P.C.

(A) Land

(B) Immovable property

(C) Either (A) or (B)

(D) Only (B)

எந்த ஒரு உரிமையியல் வழக்கிலும் நீதிமன்ற தீர்ப்புக்கு முன்பு பிரதிவாதியை கைது செய்வதற்கான உத்திரவை பெற முடியாது என்று உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 16 உட் பிரிவு (அ) முதல் (ஈ) வரையில் குறிப்பிட்டு சொல்லப்பட்ட வழக்கு எது?

(A) நிலம்

(B) அசையா சொத்துக்கள்

(C) (A) அல்லது (B)

(D) (B) மட்டும்

---

**123/DD/20**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## THE CIVIL AND CRIMINAL JUDICIAL TEST FOR MEMBERS OF THE JUDICIAL DEPARTMENT — PART - II

(With Books)

Maximum Time : 30 minutes — Maximum Marks : 20

### *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Explain the rule regarding "Res-Judicata under code of Civil Procedure.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் "முன் தீர்ப்பு தடை" தொடர்பான விதியினை விளக்குக.

2. State the circumstances under which the plaint will be rejected by Court.

   நீதிமன்றத்தால் எந்த சூழ்நிலையில் வழக்குரை தள்ளுபடி செய்யப்படும்?

3. Discuss the procedures for Appointment of Advocate Commissioner Under Civil Procedure code.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்கறி ஆணையர் நியமனம் குறித்த நடைமுறையினை விவாதிக்க.

4. What is Second Appeal? How second appeal differ from first appeal?

   இரண்டாம் மேல் முறையீடு என்றால் என்ன? முதல் மேல் முறையீட்டிலிருந்து இரண்டாம் மேல் முறையீடு எவ்வகையில் வேறுபடும்?

5. Explain the procedure of suits by or against the Government.

   அரசாங்கத்திற்காக அல்லது அதற்கு எதிராக தொடரப்படும் வழக்கின் நடைமுறையினை விளக்குக.

6. Explain the "Gannishee Order".

   "பற்றுகை உத்தர" வினை விளக்குக.

---